என்னென்ன துறைகள் அந்த இடத்தில் துவங்கப்பட இருக்கின்றன? ஏற்கெனவே அந்தக் கட்டடங்கள் அந்தப் பகுதியில் கட்டப்பட்டு இருக்கின்றன. மேலும் புதிய கட்டடங்கள் கட்டப்பட இருக்கிறபோது விரிவான திட்டங்கள் ஏதாவது வர இருக்கின்றனவா ? என்னென்ன திட்டங்களுக்கு அங்கே ஏற்பாடு செய்வதாக இருக்கிறார்கள் என்பதை நான் அறிந்து கொள்வதற்காகத்தான் கேட்டேன். எனவே அந்த விவரங்களை அமைச்சர் அவர்கள் அளிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் கேட்ட கேள்வி முந்திரி ஆராய்ச்சிப் பண்ணைப் பகுதியில் கோவை பல்கலைக் கழகம் புதிதாக பல கட்டடங்களைக் கட்ட எவ்வளவு ரூபாய் செலவு செய்யப்பட்டது என்பதுதான். எனவேதான் நான் அதற்கு மட்டும் பதிலளித்தேன். கட்டப்பட்டிருக்கிற கட்டடம்— ஆய்வுக்கூடத்திற்கு 9,76,000 ரூபாயும், பண்ணை எலிக் கட்டுப்பாட்டுக் கிடங்கு, செயல்முறைக் கூடம், திரை இல்லம், பயிற்சியாளர் விடுதி, பேராசிரியர் குடியிருப்பு ஆகிய கட்டடங்களுக்கு 7,87,000 ரூபாயும், பணியாளர்கள் குடியிருப்பு, இணைப் பேராசிரியர் குடியிருப்பு, துணைப் பேராசிரியர் குடியிருப்பு: ஓட்டுநர் குடியிருப்பு ஆகிய கட்டடங்களுக்காக 9,97,000 ரூபாயும்விருத்தாசலம் 'கிருஷிதவிக்ஞான்' கேந்திராவில் திரைஇல்லம் கட்ட 92,000 ரூபாயும் பணியாளர் குடியிருப்பு அலுவலகம் மற்றும் ஆய்வுக் கூடக் கட்டடம் மற்றும் விவசாயிகள் விடுதி ஆகியவற்றிற்கு 5 இலட்சம் ரூபாயும் ஆக மொத்தம் 33.52 இலட்சம் ரூபாய் கட்டடங்கள் கட்டப்பட்டு இருக்கின்றன.

குடிசை வாழ் மக்களுக்குப் பட்டா.

*2621 : திரு. அ. இரகுமான்கான்

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர், கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சென்னைப் பூங்கா நகர் தொகுதியில் பொதுப்பணித் துறைக்குச் சொந்தமான உட்வார்ப் (வால்டாக்ஸ் ரோடு யானைக்கவுனி) பகுதியில் குடிசை வாழ்மக்களுக்குப் பட்டா வழங்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, சென்னை பூங்கா நகர் தொகுதியில் பொதுப்பணித் துறைக்குச் சொந்தமான உட்வார்ப் (வால்டாக்ஸ் ரோடு

யாணைக்கவுனி) பகுதியில் குடிசைவாழ் மக்கள் வசிக்கும் பொதுப்பணித்துறைககுச் சொந்தமான இடம் கால்வாய் மேம்பாட்டு பணிகளுக்கு தேவைப்படுவதால் அவைகளைப் பொது மக்களுக்கு பட்டா வழங்க இயலாது.

திரு. அ. இரகுமான்கான் : பேரவைத் தலைவர் அவர்களே, பூங்கா நகர் தொகுதியில் இருக்கக்கூடிய அந்த உட்வார்ப் பகுதியில் கடந்த 100,200 ஆண்டுகளாக ஆதி திராவிட மக்கள் வாழ்கிறார்கள். அவர்கள் அங்கே குடிசை போட்டுக் கொண்டு வாழ்கிறார்கள். அவர்களுக்கு ரேஷன் கார்டுகள் தரப்பட்டு இருககின்றன. வோட்டர் லிஸ்டில் அவர்களுடைய பெயர்கள் இருக்கின்றன. கார்ப்பரேசன் லைட் வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. குடிசை மாற்று வாரியம் பாதை அமைத்துக் கொடுத்திருக்கிறது. அவர்கள் அங்கே தொடர்ந்து வாழ்கிறார்கள். எனவே அங்கே இதுவரையில் கால்வாய் கட்டுவதற்கான திட்டம்- கடந்த ஒரு நூற்றாண்டு காலமாக அந்த மக்கள் அங்கே வாழ்கிறார்கள், இடையிலே கிடையாது. அப்படி இருந்தும் அந்தத் தவறான கருத்துக்களைச் சொல்லி பட்டாக்கள் கொடுப்பதை தவிர்த்திடுவதை மாற்றி அந்தப் பகுதியில் உள்ள குடிசைவாழ் மக்களுக்குப் பட்டாக்கள் வழங்கப் படுமா ? அது குறித்து இதுவரையில் ஏதேனும் திட்டங்கள் இருந்தால் அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, பொதுவாகவே வருவாய்த்துறையிலே இருந்து ஒரு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அனைத்து நீர்நிலைப் புறம் போக்கு நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை வரைமுறைப் படுத்தவேண்டும் என்று சொல்லி அவ்வாறு வரைமுறைப் படுத்துவது சரி செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே நீர்நிலைப் பகுதியில் பட்டா கொடுப்பதை நிறுத்தி வைக்கவேண்டும் என்று வருவாய்த்துறை பொதுவாக ஆணையிட்டிருக்கிறது. இந்த இடத்தைப் பொறுத்தவரையில் கால்வாய் மேம்பாட்டுப் பணிகளுக்குத் தேவைப்படுகிறது. கால்வாய் அமைக்க வேண்டும் என்று மாண்புமிகு திரு. இரகுமான்கான் அவர்கள் கேட்டார்கள். கால்வாய் மேம்பாடு செய்வதற்கான திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

9-30 மணி.

திரு. அ. இரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே கால்வாய் அமைக்கும் திட்டத்திற்கு

இடமே இல்லை. சுப்ரீம் கோர்ட் தீர்ப்பின்படி, அந்தப் பகுதியில் அவர்கள் நீண்ட நெடுங்காலமாக இருப்பதால், அவர்களுக்குப் பட்டா வழங்கலாம் என்று கூறியிருக்கிறது. அமைச்சர் அவர்கள் சட்டம் படித்தவர். நமது முதல்வர் அவர்கள், ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்ற கொள்கையை உடையவர் என்ற காரணத்தால், இந்த அரசு அந்தத் திட்டத்தைக் கிடப்பில் போட்டுவிட்டு, பட்டா வழங்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, உறுப்பினருக்கு தொகுதியின் மீது இருக்கிற அக்கறையைப் பாராட்டுகிறேன். இருக்கிற சட்டத்தின் நடைமுறைகளைத் தெரிவித்தேன். இவற்றுக்கு மேல் அரசு எந்த நேரத்திலும் எதையும் செய்யலாம்.

திரு. சா. கணேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தி. நகர் தொகுதியில் கோடம்பாக்கத்தில், டிரஸ்ட் புரத்தில் குடிசைப் பகுதிகளில்..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தொடர்பில்லாத வினா.

இரயில்வே மேம்பாலம்

3523 திரு. இ. புகழேந்தி :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கடலூர் திருப்பாதிரிப்புலியூரில் இரயில்வே மேம்பாலம் அமைத்திட அரசு பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, ஆம்.

திரு. இ. புகழேந்தி : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாவட்டத்தின் தலைநகரான கடலூர் நகரம், சுமார் 2 லட்சம் மக்கள் வசிக்கின்ற நகரமாகும். அந்த நகரத்தின் இதயப் பகுதியாக இருக்கின்ற திருப்பாதிரிப்புலியூர் போக்கு வரத்து அதிகமாக இருக்கின்ற பகுதி. அங்கே ரயில்வே மேம்பாலம் அமைவது மிக அவசியமானதொன்றாகும். அந்த மக்களின் 20 ஆண்டுக்கால கோரிக்கையான அந்த மேம் பாலத் திட்டத்தை உடனடியாக ஏற்று நமது அரசு ரயில்வே

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS